

அரக்கோணம் நாடாளுமன்றத் தொகுதியில் இந்தியா கூட்டணி சார்பில் திமுக வேட்பாளராக போட்டியிடும் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகனை ஆதரித்து திருவள்ளூர் மேற்கு மாவட்டம் பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றியம் கரிம்பேடு பகுதியில் மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ. தலைமையில் அமைச்சர் ராணிப்பேட்டை ஆர்.காந்தி தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கி வைத்தார். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, ஒன்றிய செயலாளர் வழக்கறிஞர் சி.ஜெ.சீனிவாசன், திருத்தணி தொகுதி பொறுப்பாளர் மனோகரன், நிர்வாகிகள் நாகலிங்கம், பி ரவீந்திரநாத், கே.எம் சுப்பிரமணி, ஜி.ரவீந்திரா, பி.டி.சந்திரன் பி பழனி, சிஎம் சண்முகம் ஆர்த்தி ரவி, என்.கிருஷ்ணன் வி. வினோத் குமார் , டி ஆர் கே பாபு எம்.ஜெ.ஜோதி குமார், முரளி சேனா, திருமலை லோகநாதன், ஐயப்பன், உள்பட பலர் உள்ளனர்.



வடசென்னை நாடாளுமன்றத் தொகுதி சென்னை வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட பெரம்பூர் சட்ட மன்ற தொகுதியில் இந்தியா கூட்டணி வேட்பாளர் டாக்டர் கலாநிதி வீராசாமியை ஆதரித்து கூட்டணி கட்சிகளின் செயல் வீரர்கள் கூட்டம் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் தலைமையில் பகுதி செயலாளர்கள் க.ஜெயராமன் அ.முருகன் முன்னிலையில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆலோசனையில் நடைபெற்றது.இக்கூட்டத்தில் கூட்டணி கட்சிகளின் மாவட்ட செயலாளர், மாநில நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், வட்ட செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில்

# “இந்தியா” கூட்டணி மாவட்டச் செயலாளர்கள் - தலைவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு. நாசர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

*திருவள்ளூர், மார்ச் 25-*

நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு திருவள்ளூர் (தனி) நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிடும் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் சசிகாந்த் செந்திலை ஆதரித்து திருவள்ளூர் நாடாளுமன்றத் தொகுதி, திருவள்ளூர் மத்திய மாவட்ட ஆவடி மற்றும் பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட “இந்தியா” கூட்டணி கட்சி மாவட்ட செயலாளர்கள் மற்றும் தலைவர்கள் ஆலோசனைக் கூட்டம் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ எனது தலைமையில் இன்று (திங்கள் கிழமை 25.03.2024) மாலை 4:00 அளவில் ஆவடி, பருத்திபட்டில் கீதா சிட்டாடல் மஹாலில் நடைபெற உள்ளது.



இக்கூட்டத்தில் திருவள்ளூர் மத்திய மாவட்டத்தை சார்ந்த திமுக மற்றும் இந்தியா கூட்டணி தோழமை கட்சிகளான காங்கிரஸ், விசிக, சி.பி.எம்., சி.பி.ஐ., மதிமுக, இந்தியன் யூனியன் முஸ்லீம் லீக், மக்கள் நீதி மையம், மனிதநேய மக்கள் கட்சி, மனிதநேய ஜனநாயக கட்சி, தமிழக வாழ்வுரிமை கட்சி, தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி, சமத்துவ மக்கள் கழகம், திராவிடர் கழகம், கொ.ம.தே.க உள்ளிட்ட கட்சிகளின் நிர்வாகிகள், மற்றும் திமுக மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைக்கழக சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் ஆகியோர் நடைபெற உள்ள வேட்பாளர் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு. நாசர் எம்.எல்.ஏ. கேட்டுக் கொண்டுள்ளார்.

### ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா - க.தனசேகரன் - கன்னிகை ஸ்டாலின் - கே.கண்ணன் பங்கேற்பு! கலைஞர் நகர் தெற்கு

# 136 ‘அ’ வட்ட பாகத் தலைவர்கள் - நிர்வாகிகள் கூட்டம்!

## வட்டச் செயலாளர் இராஜ். செழியன் வேண்டுகோள்!

*சென்னை,மார்ச்.25-*

*கலைஞர் நகர் தெற்கு - 136 (அ) வட்டச் செயலாளர் இராஜ். செழியன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:*

*இதில், கலைஞர் நகர் தெற்குப் பகுதி 136(அ) வட்ட பாகத் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் கூட்டம் இன்று (25.03.2024) மாலை 6மணியளவில் கலைஞர் நகர் தெற்கு பகுதி அலுவலகத்தில் நடைபெறுகிறது.*

*ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ. தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன் எம்.சி., தொகுதிப் பார்வையாளர் கன்னிகை ஜி.ஸ்டாலின், பகுதிச் செயலாளர் கே. கண்ணன் எம்.சி., பொதுக் குழு உறுப்பினர் உ.துரைராஜ் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறார்கள்.*

*இக்கூட்டத்தில் வட்டக் கழக நிர்வாகிகள், வட்டத்திற்குட்பட்ட பகுதி நிர்வாகிகள், பாகத் தலைவர்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு 136 அ வட்டச் செயலாளர் இராஜ். செழியன் வேண்டு கோள் விடுத்துள்ளார்.*

# ‘இந்தியா’ கூட்டணியில் இடம் பெற்றுள்ள இந்திய தேசிய காங்கிரஸ் செயல்வீரர்கள் கூட்டம்!

## அமைச்சர் மா. சுப்பிரமணியன் சிறப்புரையாற்றுகிறார்!



தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் இந்தியா கூட்டணியின் கழக வெற்றி வேட்பாளர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியனுக்கு ஆதரவாக தேர்தல் பணியில் ஈடுபடும் தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட தி.மு.க.வின் தோழமை இயக்கமான இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் செயல்வீரர்கள் கூட்டம் காங்கிரஸ் கட்சியின் மாவட்டக் கழக செயலாளர் முத்தழகு, அடையார் துரை ஆகியோர் தலைமையில் இன்று (25.3.2024) மாலை 6 மணி அளவில் சைதாப்பேட்டை வேளாங்கண்ணி மகளிர் கல்லூரியில் நடைபெறுகிறது.

எனவே நிகழ்வில் எனவே தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட முன்னணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இங்ஙனம்,

**தென் சென்னை நாடாளுமன்ற தொகுதி தேர்தல் பணிக்குழு**

### ‘இந்தியா’ கூட்டணி சார்பில் விழுப்புரம் தொகுதியில் போட்டியிடும்

# விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வேட்பாளர் துரை ரவிக்குமாரை ஆதரித்து பிரச்சாரம்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் சிறப்புரை!

*விழுப்புரம், மார்ச் 25-*

விழுப்புரம் தொகுதியில் போட்டியிடும் கூட்டணி கட்சி வேட்பாளர்துரை ரவிக்குமாரை திமுகவினர் தத்தெடுத்துக் கொண்டோம் என்று திண்டிவனத்தில் நடைபெற்ற நிர்வாகிகள் அறிமுக கூட்டத்தில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேசினார்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் விழுப்புரம் நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட திண்டிவனம் தொகுதியில் திமுக நிர்வாகிகள் அறிமுக கூட்டம் திண்டிவனத்தில் நடைபெற்றது.

விழுப்புரம் வடக்கு மாவட்ட பொருளாளரும் திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் ரமணன் தலைமை தாங்கினார்

மாவட்டத் துணைச் செயலாளர் ரவிக்குமார்,ஒன்றிய செயலாளர்கள் தயாளன்,பழனி, ரவிச்சந்திரன், சொக்கலிங்கம், திண்டிவனம் நகர செயலாளர் கண்ணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில்

சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு விழுப்புரம் நாடாளுமன்ற தொகுதி வேட்பாளர் துரை ரவிக்குமாரை அறிமுகம் செய்து வைத்து சிறப்புரை ஆற்றினார்.

அப்போது நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்:

திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற 33 மாதம் ஆட்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் எண்ணற்ற பல திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி கொண்டு வருகிறார் முதலமைச்சரின் இத்திட்டங்களை திமுகவினர் இலந்தோறும் கொண்டு சென்றுபெண்களிடம் எடுத்துக் கூறி வாக்கு சேகரிக்க வேண்டும்.

மத்தியில் ஆளும் பாஜக பாசிச ஆட்சியை வீழ்த்தி முதலமைச்சர் தலைமையிலான ஜனநாயக ஆட்சியை இந்தியாவில் கொண்டு வருவதற்கு திமுகவினர் கடுமையாக உழைக்க வேண்டும்.

திமுகவினரின் கடுமையான உழைப்பால் விழுப்புரம் நாடாளுமன்ற தொகுதியில் உள்ளடங்கிய திண்டிவனம் சட்டமன்றத் தொகுதியில் கூட்டணி கட்சி சார்பில் போட்டியிடும் துரை ரவிக்குமார் சுமார் ஒரு லட்சம் வாக்குகள் கூடுதலாக பெற்று வெற்றி பெற வேண்டும் .

தமிழ்நாடு முதலமைச்சரின் அறிவுறுத்தலின்படி விழுப்புரம் நாடாளுமன்ற தொகுதியில் இரண்டாவது முறையாக போட்டியிடும் கூட்டணி கட்சியின் வேட்பாளர் துரை ரவிக்குமார் அவர்களை நமது கட்சியின் வேட்பாளராகவே கருத வேண்டும் எனவே வேட்பாளரை நாம் தத்தெடுத்து கொண்டு விடுதலை சிறுத்தைகள் கட்சியினரை நமது திமுக கட்சியினராக எண்ணி வெற்றி பெறுவதற்காக கடுமையாக உழைக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் சீத்தாபதி சொக்கலிங்கம்,செந்தமிழ் செல்வன், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாநில பொதுச் செயலாளர் வன்னியரசு, மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர்,விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட செயலாளர்கள் திலீபன், மலைச்சாமி,உள்ளிட்ட திமுக தோழமைக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### மயிலாடுதுறை வெங்கடேசன் - திருச்சி ஆரீப் மக்பூல் தலைமையில்

# சவுதி அரேபியாவில் இஃப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சி!

## கழக அயலக அணி - வெளிநாடு வாழ் தமிழர் இந்தியர்கள் நலச்சங்கம் சார்பில் நடைபெற்றது!

*தம்மாம், மார்ச் 25*

*சவுதி அரேபியா தம்மாம் கிழக்கு மண்டல தி.மு.க. அயலக அணி மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் இந்தியர்கள் நலச் சங்கம் ஒருங்கிணைந்து கடந்த 23-03- 2024 அன்று மாலை தமிழர்கள் ஒன்று கூடிய இஃப்தார் நிகழ்ச்சி தம்மாம் ஜாய்கா ரெஸ்டாரன்டில் நடைபெற்றது.*

*இந்நிகழ்ச்சியில் வெளிநாடு வாழ் தமிழர் இந்தியர்கள் நலச்சங்க கிளைகளின் ஒருங்கிணைப்பாளர் முகவை சீனி முகம்மது, பொருளாளர் துறையூர் கமால் இணைந்து ஒருங்கிணைத்தார்கள்.*

*தி.மு.க. மூத்த உறுப்பினர் ஏ.எஸ்.டி. சிவக்குமார் மற்றும் கள்ளக்குறிச்சி ஃபாருக் மற்றும் திருச்சி யூனுஸ் சிறப்புரையாற்றி னார்.*

*இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக யுனிவர்சல் நிறுவனத்தைச் சேர்ந்த தொழிலதிபர் பக்ருதீன் அப்துல் மஜீத் கலந்து கொண்டார். பல்வேறு வினாடி வினா நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் வெற்றி பெற்ற 12 நபர்களுக்குப் பரிசளிக்கப்பட்டது.*

*சவுதி அரேபியா அயலக அணி செயலாளர் அபூரயான் என்னும் ஆசிப் நன்றியுரை ஆற்றினார்.*

*மேலும் கேரளா அமைப்பிலிருந்து நாசு சவுக்கத் அலி, ஏர்போர்ட் கணேசன், சென்னை இம்ரான், யூனுஸ், சென்னை ஜியா, அப்துல் ரஹ்மான், ரிஷி உணவகம் ஷாஹுல், முகவை யாசர், முகவை சபிக், ஆசிரியை ஃபரீதா, சென்னை அக்பர், மாணவன் அமீரா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.*

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ. - ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. பங்கேற்பு

# 133 ‘அ’ வட்ட பாகப் பொறுப்பாளர்கள் கூட்டம்!

## வட்டச் செயலாளர் பி.மாரி வேண்டுகோள்!

*சென்னை, மார்ச் 25 -*

*133 அ வட்டக் கழகச் செயலாளர் பி.மாரி விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-*

*தென்சென்னை நாடாளுமன்ற இந்திய கூட்டணியின் கழக வேட்பாளர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியனை ஆதரித்து 133 ‘அ’ வட்ட பாகப் பொறுப்பாளர்கள், பாக உறுப்பினர்கள் கூட்டம் இன்று (25.03. 2024 திங்கட்கிழமை) மாலை 7.30 மணி அளவில் 133 அ வட்ட கிளை கழகம் மனமகிழ் மன்றத்தில் நடைபெறுகிறது.*

*இதில் தியாகராயர் நகர் மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை முன்னிலை வகித்திட, சென்னை தென் மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி, தொகுதி பார்வையாளர் ப.அப்துல் மாலிக் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கி பேசுகின்றனர்.*

*இக்கூட்டத்தில் 133 அ வட்டத்தை சார்ந்த வட்ட கழக நிர்வாகிகள், பகுதி பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பாகப் பொறுப்பாளர்கள், பாக உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு வட்டச் செயலாளர் பி.மாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.*




சென்னை கிழக்கு மாவட்டம், அம்பத்தூர் தெற்கு பகுதியில் 88வது வட்டத்தில் 22.3.2024 அன்று தி.மு.க சார்பில் வட்டக் செயலாளர் சி.சீனிவான் தலைமையில் இந்தியா கூட்டணி கட்சிகளின் அனைத்து நிர்வாகிகள் செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்திற்கு வருகை தந்து பல ஆலோசனை வழங்கிய மாவட்டக் கழகச் செயலாளர் இந்து சமய அறநிலை துறை– அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார். இதில் அம்பத்தூர் வடக்கு பகுதி செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்கினார். இக்கூட்டத்தில் பி.கே.மூர்த்தி 7 வது மண்டல குழுத் தலைவர் அம்பத்தூர் தெற்கு பகுதிச் செயலாளர் டி.எஸ்.பி.இராஜகோபால் எம்.சி. அம்பத்தூர் தொகுதி பார்வையாளர் பி.டி.சி. செல்வராஜ் அம்பத்தூர் கிழக்கு பகுதிச் செயலாளர் எம்.டி.ஆர்.நாகராஜ், மாவட்ட ஆதிதிராவிட நலக்குழு அமைப்பாளர் எல்.பி.எப்.மோகன், ஜி.வி.நாகவள்ளி எம்.சி ஜெ.பாலமுருகன், மாவட்ட பிரதிநிதிகள் பகுதி நிர்வாகிகள், வட்ட நிர்வாகிகள், மாவட்ட கழக , அனைத்து அணிகளின் நிர்வாகிகள் , பகுதி, வட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள் BLA2 (பாக முகவர்கள்) BLC (பாக உறுப்பினர்கள்), இந்தியா கூட்டணியின் தோழமைக் கட்சி நிர்வாகிகள், கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் அடங்கிய 2 சட்டமன்றத் தொகுதிகளில்

# காஞ்சிபுரம் நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளர் க.செல்வம் தேர்தல் பிரச்சாரம்!

## மாவட்ட தி.மு.க. செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



“இந்தியா” கூட்டணி கட்சிகளின் சார்பில் காஞ்சிபுரம் (தனி) நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் தி.மு.கழக வெற்றி வேட்பாளர் க.செல்வம் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் அடங்கிய செங்கல்பட்டு திருப்போரூர் ஆகிய 2சட்டமன்றத் தொகுதிகளில் அடங்கிய ஒன்றிய - நகர - பேரூர்களில் கீழ்க்கண்ட தேதிகளில் கீழ்க்கண்ட விவரப்படி திறந்த ஜீப் மூலம் வீதி வீதியாகச் சென்று வாக்காளர்களை சந்தித்து வாக்குகள் சேகரிக்கிறார்.

வேட்பாளர் க.செல்வம் வாக்குசேகரிக்கும் சுற்றுப்பயண நிகழ்ச்சி அட்டவணை விவரம் வருமாறு.

| நாள் | காலை/ மாலை | ஒன்றிய - நகர - பேரூர் |
|---|---|---|
| 4.4.2024 | காலை | திருப்போரூர் வடக்கு ஒன்றியம் |
| வியாழன் | மாலை | திருப்போரூர் தெற்கு ஒன்றியம் |
| 7.4.2024 | காலை | செங்கல்பட்டு நகரம் |
| ஞாயிறு | மாலை | காட்டாங்குளத்தூர் தெற்கு ஒன்றியம் |
| 9.4.2024 | காலை | திருப்போரூர் பேரூர் மாமல்லபுரம் நகரம் |
| செவ்வாய் | மாலை | திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றியம் |
| | | திருக்கழுக்குன்றம் பேரூர் |
| 11.4.2024 | காலை | திருக்கழுக்குன்றம் வடக்குஒன்றியம் |
| வியாழன் | மாலை | காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றியம் |
| 13.4.2024 | காலை | மறைமலைநகர் நகரம் |
| சனி | மாலை | நந்திவரம்கூடுவாஞ்சேரி நகரம் |

எனவே காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் அடங்கிய ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் அந்தந்த ஒன்றிய நகர பேரூர்களில் நம்முடைய வெற்றி வேட்பாளர் க.செல்வம் வாக்கு சேகரிப்பு சுற்றுப்பயண வழித்தடத்தை முறையாக பட்டியலிட்டு அந்தந்த ஒன்றிய நகர பேரூர்களில் உள்ள “இந்தியா” கூட்டணி கட்சிகளின் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் நிர்வாகிகள் மற்றும் நம்முடைய கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்களுக்கு முறையாக தகவல் தந்து இந்த வாக்கு சேகரிக்கும் சுற்றுப் பயணத்தை மிகவும் எழுச்சியுடன் ஏற்பாடு செய்திடும் படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் **தா.மோ.அன்பரசன்,**
செயலாளர்,
காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.